**செய்தி வெளியீடு எண்: 14/2022** **நாள்: 05.03.2022**

## பத்திரிக்கை செய்தி

## செனை மெட்ரோ இரயில் நிலையங்களில் ரேபிடோ பைக் மற்றும் உபர் ஆட்டோ வசதியை இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) தொடங்கிவைத்தார்

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் ரேபிடோ பைக் மற்றும் உபர் ஆட்டோ வசதி மெட்ரோ இரயில் பயணிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், உபர் ஆட்டோவில் பயணிப்போருக்கு 20 சதவீதம் மற்றும் ரேபிடோ பைகில் பயணிப்போருக்கு 30 சதவீதம் கட்டண சலுகை உள்ளதாகவும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) தெரிவித்தள்ளார்.

கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலைய வாயிலில் ரேபிடோ பைக் மற்றும் உபர் ஆட்டோ சேவையை தொடங்கிய சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு வந்து செல்லும் பயணிகளுக்காக அவர்கள் செல்லும் இடத்திற்கு வசதியாக பல்வேறு வாகன வசதிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஏற்பாடு செய்து வருகிறது. இதில் மெட்ரோ இரயில் நிலையங்களில் இருந்து 12 சிற்றுந்து இணைப்பு பேருந்துகள் குறிப்பிட்ட மெட்ரோ இரயில் நிலையங்களில் இயக்கப்பட்டு மெட்ரோ பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பயணிகளின் சேரும் இடத்தை எளிதாக்கும் வகையில் ரேபிடோ பைக் மற்றும் உபர் ஆட்டோ வசதியை சென்னை மெட்ரோ இரயில் நிலையத்தில் ஏற்பாடு செய்துள்ளது. இதனை பயணிகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ளலாம். சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் 4 சக்கர வாகனம் (மினி பஸ்) 3 சக்கர வாகனம் (ஆட்டோ) மற்றும் இரண்டு சக்கர வாகனம் (பைக்) வசதி பயணிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிறிய பேருந்துகள் செல்லமுடியாத சாலைகளில் உபர் ஆட்டோவும் (3 சக்கர), உபர் ஆட்டோ செல்ல முடியாத இடத்திற்கு ரேபிடோ பைக் (இரண்டு சக்கர) வசதி உள்ளது.

உபர் ஆட்டோ கிண்டி மெட்ரோ, அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ, எழும்பூர் மெட்ரோ, கோயம்பேடு மெட்ரோ மற்றும் திருமங்கலம் மெட்ரோ ஆகிய 5 மெட்ரோ இரயில் நிலையங்களில் இயக்கப்படுகிறது.

உபர் ஆட்டோ பயணிகள் தங்கள் செல்போனில் உள்ள உபர் செயலியில் “UBERCMRL” என்ற குறியீட்டை பயன்படுத்தினால் 20% கட்டண சலுகை பெறலாம். இதில் அதிகபட்சமாக ரூ.50 வரை மட்டுமே கட்டண சலுகை பெறமுடியும். இந்த வாய்ப்பு இந்த ஆண்டு ஆகஸ்டு 31-ஆம் தேதி வரை பயன்படுத்தலாம்.

ரேபிடோ பைக், வழித்தடம் 1-ல் அமைந்துள்ள விமான நிலையம் மெட்ரோ, அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ, கிண்டி மெட்ரோ, சின்னமலை மெட்ரோ, எல்.ஐ.சி. மெட்ரோ, அரசினர் தோட்டம் மெட்ரோ, உயர் நீதிமன்றம் மெட்ரோ, தியாகராயா கல்லூரி மெட்ரோ, திருவொற்றியூர் மெட்ரோ, விம்கோ நகர் மெட்ரோ ஆகிய 10 மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் வழித்தடம் 2-ல், பரங்கிமலை மெட்ரோ, ஈக்காட்டுத்தாங்கல் மெட்ரோ, அசோக் நகர் மெட்ரோ, வடபழனி மெட்ரோ, கோயம்பேடு மெட்ரோ, திருமங்கலம் மெட்ரோ, அண்ணா நகர் கோபுரம் மெட்ரோ, பச்சையப்பன் கல்லூரி மெட்ரோ, கீழ்ப்பாக்கம் மெட்ரோ, நேரு பூங்கா மெட்ரோ, எழும்பூர் மெட்ரோ புரட்சித்தலைவர் டாக்டர்.எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ ஆகிய 12 மெட்ரோ இரயில் நிலையங்கள் என மொத்தம் 22 மெட்ரோ இரயில் நிலையங்களில் இந்த இருசக்கர வாகன வசதி உள்ளது.

ரேபிடோ பைக் பயணிகள் தங்கள் செல்போனில் உள்ள ரேபிடோ செயலியை பயன்படுத்தி 30% கட்டண சலுகை பெறலாம்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), உதவி பொது மேலாளர் திரு. எஸ். சதீஷ் பிரபு (ரோலிங் ஸ்டாக்), மேலாளர் திரு. எஸ். கிருபாகரன் (இயக்கம்), ஆலோசகர்கள் திரு. எஸ். ராமசுப்பு (இயக்கம் மற்றும் ரோலிங் ஸ்டாக்), திரு. கே. ஏ. மனோகரன் (சிக்னலிங் மற்றும் டெலிகாம்), ரேபிடோ மண்டல மேலாளர் திரு. கே. கோபிதாஸ், உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**